4வது கூடுதல் மாவட்ட மற்றும்  அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 91/2013 நாள்: 29.10.2025 பி.வா.சா.1 – கோமதிநாயகம்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -

நான் இந்த வழக்கில் 2வது பிரதிவாதி என்றால் சரிதான். 2வது பிரதிவாதி சண்முகவடிவேல் எனது கணவர் என்றால் சரிதான். நான் 7வது வரை படித்துள்ளேன். பி.சா.ஆ.7 ஆவணமான செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது கணவர் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னைவிட எனது கணவருக்கு படிப்பு அதிகம் என்றால் சரிதான், அவர் 9ம் வகுப்பு வரை படித்துள்ளார். இந்த வழக்கில் எனது கணவர் திருப்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் நான் எனது கணவருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். எனது கணவர் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் சரிதானா என்றால் தெரியாது. S.V.சண்முகம் என்பவர் எனது தகப்பனார் எனறால் சரிதான். எனது தந்தை திருப்பூர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது எனது கணவரின் அதிகாரம் பெற்ற முகவர் என்ற பெயரில் இந்த வழக்கை நடத்தி வந்தார் என்றால் சரிதான். எனது கணவருக்காக, எனது தந்தை இந்த வழக்கில் இடைநிலை மனு எண்.1020/2013 என்ற மனுவை தாக்கல் செய்து மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் சரியானது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையிலும், சத்தியபிரமாண முதல் விசாரணை வாக்குமூலத்திலும், எனது கணவர் தாக்கல் செய்துள்ள எதிர்

வழக்குரையிலும், இடைநிலை மனு எண்.1020/2013 லும் பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணம் என்னுடைய சகோதரர் வசம் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, அது எனது கணவரின் சகோதரரின் கைவசம் இருப்பதாக நான் சொல்லியுள்ளேன் என்று கூறுகிறார். பி.சா.ஆ.1 ஆவணம் வாதிகள் வசம் இருப்பதாக நான் முதல் விசாரணையில் பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் பொய்யான விவரத்தை சொல்லி மேற்படி ஆவணத்தை குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் குறியீடு செய்யும் போது வாதிகள் தரப்பில் அதை ஆட்சேபனை செய்தார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தை எனது கணவரின் சகோதரர்கள் எடுத்து சென்றதற்காக எனது கணவர் காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரின் நகலையோ, அதற்கான ரசீதையோ நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி சொத்து பிரச்சனை என்பதால் ரசீது கொடுக்கமுடியாது என்று காவல் நிலையத்தில் சொல்லிவிட்டார்கள் என்றும், எனது கணவர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சி கூறுகிறார். மேற்படி காவல் நிலையத்தில் ரசீது வழங்க முடியாது என்று போலிசார் சொன்ன விவரத்தை என்னுடைய எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்திலுமம சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகன் மோகன் பிரசாத் என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ஆன செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது மகனின் வயது அப்போது 12 வயது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் 1995ல் பிறந்தான். பி.சா.ஆ.1 ஆவணம் 1986 ல் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், அதாவது எனது திருமணத்திற்கு முன்பே ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான், எனது கணவர் சொல்லி எனக்கு தெரியும். வழக்கு விவரங்கள் என்னை விட எனது கணவருக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆன பாகபிரிவினை நடந்ததாக சொல்லப்படும் பத்திரம் ரூ.2.50 முத்திரை தாளில்

எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். உடுமலைபேட்டையில் உள்ள கருவூலகம் உடுமலைபேட்டைக்கு வந்து 100 ஆண்டுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1 ஆன ஆவணத்தில் உள்ள முத்திரை தாள்கள் கோயம்புத்தூர் கருவூலத்தில் வாங்கப்பட்டுள்ளதாகவும், அது உடுமலைபேட்டை முத்திரை தாள் விற்பனையாளரால் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள மற்ற தாள்கள் முத்திரை இல்லாத தாள்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 28.02.1986 ல் அவரவருக்கு பாகம் பிரித்து அன்றே தனிதனி சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாசகம் பி.சா.ஆ.1 ஆவணத்தில் 3வது பக்கத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்படாததாலும், அதில் சரியான முத்திரை தாளில் எழுதப்படாததாலும், மேற்படி ஆவணம் ஒளி நகல் என்பதாலும், மேற்படி ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கு வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தின் படி தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அது அவரின் தனிபட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். எனது மாமனாருக்கு தாவா சொத்துக்கள் தனிபட்ட சொத்துக்கள் என்பதால் அவருடைய மகன்களுக்கு இந்து வாரிசுரிமை சட்டப்படி உரிமையில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்திலும், என்னுடைய எதிர் வழக்குரையிலும், எனது கணவர் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையிலும், எனது கணவருக்கு பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சி செட்யூல் சொத்து மட்டும் பாத்தியப்பட்டது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சி பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. மேற்படி சொத்து காலை எண்.52 மற்றும் 53 ல் உள்ளது. மேற்படி சொத்தின் எல்கை விவரங்கள் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 ல் சொல்லியுள்ள சி செட்யூல் சொத்தின் விஸ்தீரணம் 48 செண்ட் காலியிடம்

மற்றும் 10 செண்ட் மாட்டுசாளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவருக்கு மேற்படி சி பட்டிகை சொத்து படி 58 செண்ட் ஒதுக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் சி பட்டிகை சொத்தில் எனது கணவருக்கு வீடு ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் மாட்டுசாளை ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது, அது வீடு என்று சாட்சி கூறுகிறார். மேற்படி ஆவணத்தில் சி பட்டிகை சொத்தில் வீடு இருந்ததாகவும், அதில் மின் இணைப்பு இருந்ததாகவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ஆவணத்தில் எனது கணவருக்கு 1.10 ஏக்கர் பி.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிடைத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ல் 58 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் பி.சா.ஆ.7 ல் 1 ஏக்கர் 10 செண்ட் ஒதுக்கப்பட்டதாக எவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் சாட்சி எனது கணவரும் அவருடைய சகோதரரும் செய்து கொண்ட பரிவர்த்தனையில் கூடுதல் சொத்து கிடைத்ததாக கூறுகிறார். மேற்படி பரிவர்த்தனை சம்பந்தமான ஆவணங்கள் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஒரு ஏக்கர் 10 செண்ட் கிடைத்த விவரத்தை என்னுடைய எதிர்வழக்குரையிலோ, எனது கணவரின் எதிர்வழக்குரையிலோ, என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பரிவர்த்தனை மூலம் ஒரு ஏக்கர் 10 செண்ட் கிடைத்ததாக சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு பி.சா.ஆ.1 ஆவணப்படி கிடைத்ததாக சொல்லப்படும் சொத்தில் மின் இணைப்போ, வீடோ இல்லாத போது பி.சா.ஆ.7 ஆவணத்தில் மின் இணைப்பும், வீடும் இருப்பதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் அதன்படி பி.சா.ஆ.7 ஆவணம் தயாரித்ததாக சொல்வதும் சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்கள் 09.11.2022 ல் தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில்

மேற்படி ஆவணங்கள் பெறப்பட்டுள்ளதால், அவை இந்த வழக்கிற்கு தொடர்புடையவை அல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.8 ஆன கந்தாய ரசீதுகள் இந்த வழக்கிற்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை, அதனால் அவை இந்த வழக்கிற்கு தொடர்புடையவை அல்ல என்றால் சரியல்ல. மேற்படி பி.சா.ஆ.4, 5 மற்றும் 8 ஆவணங்கள் பற்றி என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 24.06.2023 தேதியிட்ட பி.சா.ஆ.6 ஆவணம் வழக்கு நிலுவையில் இருக்கும் போது எனது கணவர் எனக்கு எழுதி கொடுத்ததால் மேற்படி ஆவணமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லப்படும் தேதியிலிருந்து 2007 ம் ஆண்டில் பி.சா.ஆ.7 ஆவணம் ஏற்படுத்தப்படும் வரை எனது கணவர் நாங்கள் உரிமை கோரும் சொத்துக்களை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு வருவாய் துறை ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தனிபட்ட முறையில் எனது கணவர் சுவாதீனத்தில் இல்லாததால் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பி.சா.ஆ.7 ஆவணத்தை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், 1986 க்கு முன்பே பாகம் ஏற்பட்டுவிட்டதாக சொல்லியுள்ளார், நான் என்னுடைய எதிர்வழக்குரையில் 28.02.1986 ல் பாகபிரிவினை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் இதில் எது உண்மை என்றால் சாட்சி 28.02.1986 ல் தான் பாகபிரிவினை ஏற்பட்டுள்ளது என்று கூறுகிறார். எனது கணவரின் 4 சகோதரர்கள் இந்த வழக்கில் தரப்பினர்கள் என்றால் சரிதான், ஆனால் அவர்கள் இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்து வழக்கு நடத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள 4ம் பிரதிவாதியும், 2ம் வாதியும் தாவா சொத்தில் அவர்களுக்குரிய பங்கை பொறுத்து இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஒரு கிரைய ஒப்பந்தம் செய்துள்ளதாக

நான் பி.சா.ஆ.2 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது கணவரின் சகோதரர் 4ம் பிரதிவாதியான கிருஷ்ணகுமார், ஒரு பாலாமணிக்கு 03.02.2021 ல் தாவா சொத்தின் 1/7 ஒரு பகுதியை வழக்கு நிலுவையில் உள்ள போது கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.**14** **(**மேற்படி ஆவணம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**)** மேற்படி ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள வருவாய் துறை ஆவணத்தின் படி தாவா சொத்துக்கள் அனைத்து எனது மாமனார் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணமானது எனது மாமனார் அசல் வழக்கு எண்.460/1994 ல் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை என்றால் சரிதான். மேற்படி வழக்கின் வழக்குரையை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் எந்த வழக்கிற்கு அதிலுள்ள வாதிகள் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்ட பிறகு எனக்கு வந்த அழைப்பாணையை என்னுடைய முகவரியான ஆனைமலை தாலுகா, சோமந்தரை சித்தூரில் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு தான் வாங்கினேன் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சோமந்தரை சித்தூரில் தான் வசித்து வருகிறேன் என்றும், இவ்வழக்கிற்காக உடுமலைபேட்டையில் வசிப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு வந்து போய் கொண்டிருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள புகைப்படம் எனது கணவரின் சகோதரி தான். தாவா சொத்தில் அவர் நின்று கொண்டிருப்பதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் **(**எண்ணிக்கை **– 5)** மற்றும் அதற்கான குறுந்தகடு வா.சா.ஆ.**15. (**மேற்படி ஆவணம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**)** தாவா சொத்தில் நாங்களும் குடியிருக்கிறோம், எனது கணவரின் சகோதரி

பங்கஜவள்ளியும் குடியிருக்கிறார். தாவா சொத்துக்கள் எனது மாமனாரின் சொத்துக்கள் என்றும், அவர் அனுபவித்து எவ்வித ஆவணமும் எழுதிவைக்காமல் 29.06.2002 ல் காலமாகிவிட்டார் என்றால் சரியல்ல. எனது மாமனார் உயிருடன் இருந்த காலத்தில் நான் சொல்வது போல் பாகசாசனம் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு முதலில் தலா ⅛ பாகம் பாத்தியம் இருந்தது என்றும், எனது மாமியார் காலமாகிவிட்டதால் தற்போது வாதிகளுக்கு தலா 1/7 பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதிகள், எனது கணவருக்கும், அவரது சகோதரர்களுக்கும் தாவாசொத்தில் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு எனது கணவரும், அவரது சகோதரர்களும் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் இருப்பதால் தான் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.29 17:53:34 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.